மனதில் மனதில் மனதில்
நிங்கள் மலர்ந்து இருக்கும் வடிவில்
நினைவில் நினைவில் நினைவில்
நீங்கள் நிறைந்து இருக்கும் பொழுதில்
ஞாபங்கள் தூங்காது உங்கள் பூ முகங்கள் நீங்காது
உயிர் கொடுத்தாடிய வரலாறு
ஏழு பிறப்பெடுத்தாலும் அழியாது
களம் மறுத்தாடிய உடற்கூடு
வெறும் கல்லறைக்குள்ளே உறங்காது
ஓ வீரா மாவீரா வருவீரா வருவீரா 2

கார்த்திகைமாதம் நிலம் குளிரும் உமை
கைதொழும் போதில் உள்ளம் குளிரும்
ஊர் சனம் கூடி ஓர் சுடர்ரெற்ற
உணர்வினிலே விழி சொரியும் 2
சூரியத்ததைவன் வழி காட்ட நீங்கள்
சுழன்று ஆடுனீர் பகையோட்ட
விரியம் இங்கே நிலைநாட்ட நீங்கள்
விதையுண்டு போனிர் எமைக்காக்க
வீரம் எழுதிய கவிதை இங்கு விரைவினில் தருமா விடிவை 2

எங்களின் வானில் முழை கொள்ளும் அந்த
விண்மீன் உங்கள் பேர் சொல்லும்
எங்கிருந்தாலும் எது செய்தாலும்
உம் நினைவே குடி கொள்ளும் 2
உள்ளத்தாமரை மலர்களினால் நாம்
உங்களை தொழுகை செய்கின்றோம்
சொல்ல முடியாத வேளையிலும்
உங்கள் பேர் சொல்லத்தானே ஆறுகின்றோம்
பாரம் சுமக்குது சிலுவை இன்று
தீரும் எங்களின் அழுகை 2